இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 300 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 27 – சனிக்கிழமை 10 ஜூன் 2023 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 300 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 27 - Saturday 10 June 2023 - Chennai 16 Pages ₹ 5.00

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.6.2023) தஞ்சாவூர் மாவட்டம், விண்ணமங்கலத்தில், வேளாண்மை பொறியியல் துறை மூலம் "சி" பிரிவு வாய்க்காலில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பழனிமாணிக்கம், ராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன், ஜவாஹிருல்லா, நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.6.2023) திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், திருமங்கலம் கிராமத்தில் உள்ள கூழையாறு வடிகாலில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.பிரதீப் குமார் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

காவிரி டெல்டா பகுதியை விட்டுக் கொடுக்க மாட்டோம்! தொடர்ச்சியாக தூர் வாரி

மண்ணையும் மக்களையும் காப்போம்!

'மேகதாது அணை கட்ட அனுமதிக்க மாட்டோம்!' - திருச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி !

திருச்சி, ஜூன் 10-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று, காவிரி டெல்டா மாவட்டங்களில் ஆய்வு செய்த பின்னர், திருச்சியில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்பேட்டியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "காவிரி டெல்டா பகுதியை விட்டுக் கொடுக்க மாட்டோம்! தொடர்ச்சியாக தூர் வாரி மண்ணையும் மக்களையும் காப்போம்!" என்று குறிப்பிட்டார்.

மேலும் முதல்வர் அவர்கள் அப்பேட்டியில் "மேகதாது அணைகட்ட ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்!"என்று குறிப்பிட்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (9.6.2023) காவிரி டெல்டா மாவட்டங்களில் ஆய்வு செய்த பின்னர் திருச்சியில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது :-

முதலில் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

"திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்ததும் வேளாண்மைத் துறைக்கு கூடுதல் முக்கியத்துவம் தரக்கூடிய வகையில் வேளாண்மைக்கு என தனி பட்ஜெட் தாக்கல் செய்யப்படும்" என்று தேர்தல் உறுதிமொழி கொடுத்தோம். அந்த அடிப்படையில் தொடர்ந்து ஆட்சி அமைந்ததற்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதைத் தொடர்ந்து, வேளாண்மைத் துறைக்கு தனி கவனத்தை இந்த அரசு செலுத்திக் கொண்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், காவிரி டெல்டா மாவட்டங்களில் இருக்கக்கூடிய சேத்தியாதோப்பு, மைக்கேல்பட்டி, வடசேரியில் தனியார் மூலம் நிலக்கரிச் சுரங்கம் அமைப்பதற்கான ஏல அறிவிக்கையை ஒன்றிய அரசு வெளியிட்ட உடனே, அடுத்த நிமிடமே நம்முடைய அரசு அதை எதிர்த்துப் போராடியது. ஒன்றிய அரசுக்குக் கடிதம் அனுப்பியது. "ஒருபோதும் இதை அனுமதிக்க மாட்டோம்" என்று சட்டமன்றத்தில் நானே அறிவித்தேன். இதன் விளைவாக, ஏல அறிவிக்கையை ஒன்றிய அரசு ரத்து செய்தது உங்களுக்குத் தெரியும். டெல்டா மக்களுடைய உரிமைகளை விட்டுக் கொடுக்காத அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடர்ந்து செயல்படும்.

காவிரியின் கடைமடை வரை தண்ணீர் செல்வதை உறுதி செய்தது 'திராவிட மாடல்' அரசு!

அதேபோல, காவிரி டெல்டா பகுதியினுடைய வேளாண் வளர்ச்சிக்கும், இந்தப் பகுதியிலுள்ள ஆறுகள் மற்றும் கால்வாய்களைத் தூர் வாருவதற்கும் முன்னுரிமை அளித்துச் செயல்பட்டுக் கொண்டிருப்பதையும் நீங்களெல்லாம் அறிவீர்கள். அந்த வகையில் காவிரி பாசனப் பகுதியிலுள்ள கால்வாய்களைத் தூர்வாருவதற்காக கடந்த 2021-2022 ஆம் ஆண்டில் 62 கோடியே 91 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 3 ஆயிரத்து 859 கிலோமீட்டர் நீளமுள்ள கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.

காவிரி டெல்டா பகுதியில் வரலாற்றுச் சாதனை!

மேட்டூர் அணை பாசனத்திற்காக திறந்து விடப்படக்கூடிய நாளான ஜூன் 12-ஆம் தேதி அன்று திறக்கப்பட்டது. அதோடு வேளாண் பெருமக்களுக்கான பல்வேறு உதவிகளெல்லாம் வழங்கப்பட்டன. இதன் விளைவாக காவிரி டெல்டா பகுதியில் வரலாற்றுச் சாதனையை நாம் எட்டினோம்.

4 இலட்சத்து 90 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடியும்,

13 இலட்சத்து 341 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பா சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டு 39 இலட்சத்து 73 ஆயிரம் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டு மிகப் பெரிய சாதனையைப் படைத்தோம். சாதனை என்று சொல்வதை விட, வேளாண் புரட்சியே நடந்தது என்று சொல்லலாம்!

அதனுடைய தொடர்ச்சியாக, 2022-23-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், காவிரி பாசனப் பகுதிகளில் தூர்வாருவதற்காக 80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடைமடை வரை தண்ணீர் செல்ல வசதியாக தூர்வாரும் பணிகளெல்லாம் துரிதமாக நடந்தது.

மே 24லேயே மேட்டூர் அணையைத் திறந்தோம்!

மேட்டூர் அணை மிகச் சீக்கிரமாக மே மாதம் 24-ஆம் நாள் அன்று முன்கூட்டியே திறக்கப்பட்டது. இருந்தாலும், தண்ணீர் வந்து சேருவதற்கு முன்பே 4 ஆயிரத்து 964 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்களில் அனைத்து தூர்வாரும் பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டன.

உழவர்களுக்கான இடுபொருட்களும், கூட்டுறவு வங்கிக் கடன்களும் முழுமையாகக் கிடைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதன் விளைவாக, 2021-22-ஆம் ஆண்டு சாதனையை முறியடிக்கக்கூடிய வகையில், மற்றுமொரு வரலாற்றுச் சாதனையாக 2022-2023-ஆம் ஆண்டில் 5 இலட்சத்து 36 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் குறுவைச் சாகுபடியும், 13 இலட்சத்து 53 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பா சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டது. இதனால் 41 இலட்சத்து 45 ஆயிரம் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது. வேளாண் புரட்சி தொடர்ச்சியாக நடந்தது.

இந்த ஆண்டும் இதேபோன்ற ஒரு திட்டமிடுதலை தமிழ்நாடு அரசு செய்தது. நீர்வளத் துறை மூலமாக தூர்வாரும் பணிகளை மேற்கொள்வதற்காக 90 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

சேலம், நாமக்கல், அரியலூர், பெரம்பலூர், கடலூர், மயிலாடுதுறை, திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் 4 ஆயிரத்து 773 கிலோமீட்டர் நீளமுள்ள கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 96 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகளும் இன்னும் சில நாட்களில் முழுமையாக முடிக்கப்படும்.

அதோடு வேளாண் பொறியியல் துறை மூலமாக, 5 கோடி ரூபாய் செலவில் ஆயிரத்து 146 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்களைத் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் 651 கிலோ மீட்டர் தூர்வாரும் பணிகள் முடிந்துள்ளது. எஞ்சியுள்ள 45 விழுக்காடு தூர்வாரும் பணிகள் தொடர்ந்து விரைவாக நடைபெற்று வருகிறது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

திருச்சி – தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களில்

தூர் வாரும் பணிகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு!

சென்ற இடமெங்கும் விவசாயிகள் உற்சாக வரவேற்பு!

சென்னை, ஜூன் 10-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.6.2023) காவிரி டெல்டா மாவட்டங்களான திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்ய நேற்று முன்தினம் இரவு திருச்சி மாவட்டத்திற்கு வருகை புரிந்தார்.

முன்னதாக, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர் சுற்றுலா மாளிகையில், இவ்வாண்டு காவிரி பாசனப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, தூர்வாரும் பணிகள் குறித்த குறும்படத்தை பார்வையிட்டார்.

2023 - 2024 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், நீர் வளத்துறையின் மூலம் கால்வாய்கள் சீரமைப்பு, ஏரிகள் புனரமைப்பு, அணைக்கட்டுகள் புதுப்பித்தல், மழை நீர் சேகரிப்பு போன்ற எண்ணற்ற திட்டங்கள் உழவர்களையும் உள்ளடக்கி செயல் படுத்தப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டில் காவிரி பாசனப் பகுதிகளில் உள்ள ஆறுகள், வாய்க்கால்கள், வடிகால்களில் தூர்வாரும் பணிகள் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

திருச்சி மண்டல பாசன ஆதாரங்கள்!

அதன்படி, 2023-24ஆம் ஆண்டு திருச்சி மண்டலத்தை சார்ந்த பாசன ஆதாரங்களில் தூர்வாரப்படுகின்ற பணிகளின் விவரம்:-

சேலம் மாவட்டத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 31 பணிகளும்,

நாமக்கல் மாவட்டத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 பணிகளும்,

திருச்சி மாவட்டத்தில் 15.88 கோடி ரூபாய் மதிப் பீட்டில் 100 பணிகளும்,

கரூர் மாவட்டத்தில் 6.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 38 பணிகளும்,

அரியலூர் மாவட்டத்தில் 3.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 13 பணிகளும்,

பெரம்பலூர் மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 39 பணிகளும்,

தஞ்சாவூர் மாவட்டத்தில் 20.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 189 பணிகளும்,

திருவாரூர் மாவட்டத்தில் 12.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 111 பணிகளும்,

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 3.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 28 பணிகளும்,

மயிலாடுதுறை மாவட்டத்தில் 8.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 51 பணிகளும்,

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 31 பணிகளும் மற்றும்

கடலூர் மாவட்டத்தில் 10.00 கோடி மதிப்பீட்டில் 55 பணிகளும் என மொத்தம் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4773.13 கிலோ மீட்டர் தூரத்திற்கு, 691 பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைநோக்கு பார்வையோடு, நிகர சாகுபடி பரப்பினை உயர்த்தவும், நீர் ஆதாரங்களை சிறந்த முறையில் மேம்படுத்தவும், கால்வாய்கள், வாய்க்கால்கள், ஏரிகள் போன்றவற்றை புனரமைத்து பாதுகாக்கும் பணிகளை ஆண்டுதோறும் நேரில் ஆய்வு செய்து வருகிறார். அமைச்சர் பெருமக்கள், வேளாண் துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் நடத்தும் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், விவசாயப் பெருமக்கள் கோரும் இடங்களில் முதலமைச்சர் அவர்கள் காவிரி டெல்டா மாவட்டங்களில் தூர்வார ஆணையிட்டு, அப்பணிகள் நடைபெறும் இடங்களில் நேரில் ஆய்வு செய்தார்.

தஞ்சாவூர் மாவட்டம், ஆலக்குடியில் உள்ள முதலை முத்துவாரி மற்றும் விண்ணமங்கலத்தில் உள்ள "சி" பிரிவு வாய்க்காலில் மேற்கொள்ளப்பட்ட தூர்வாரும் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

மணிப்பூரில் மீண்டும் வன்முறை!

இம்பால், ஜூன் 10–

மெய்தேய் மற்றும் கூகி பழங்குடியினருக்கு இடையே கடந்த மாதம் 3ஆம் தேதி வெடித்த மோதல் காரணமாக மணிப்பூரில் இதுவரை 100க்கும் அதிகமானோர் பலியாகிவிட்டனர்.

35 ஆயிரம் பேர் வீடுகளை இழந்து முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். சில நாட்களுக்கு முன் உள்துறை அமைச்சர் அமித் ஷா நேரில் சென்ற தன் பேரில் நிலைமை சற்று கட்டுக்குள் வந்தது.

தற்போது மீண்டும் வன்முறை சம்பங்கள் அரங்கேறத் துவங்கி உள்ளன. மேற்கு இம்பால் மாவட்டத்தின் கிராமம் ஒன்றில் பாதுகாப்புப் படையினர் போல வேடமணிந்து சென்ற ஒரு தரப்பினர், எதிர்க்குழுவைச் சேர்ந்த 3 பேரை சுட்டுக் கொன்றனர்.

இதற்கு பதிலடி கொடுக்க எதிர்க்குழுவினர் முயற்சிப்பார்கள் என்பதால் அதைத் தடுக்க ராணுவ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, வன்முறை தொடர்பாக சி.பி.ஐ. 6 வழக்குகளை பதிவு செய்து விசாரணையைத் தொடங்கி உள்ளது. 10 பேர் அடங்கிய சிறப்புப் புலனாய்வுக் குழுவினர் மணிப்பூரில் கலவரம் பாதித்த இடங்களுக்கு நேரில் சென்று தகவல்களை சேகரிக்க உள்ளனர்.